பாசனத் திட்டங்களுக்கு முன்னுரிமை இல்லை: தமிழக அரசு மீது பாமக புகார்

First Published : 31 Aug 2010 09:13:14 AM IST

தருமபுரி, ஆக. 30: பாசனத் திட்டங்களுக்கு தமிழக அரசு முன்னுரிமை அளிகக்காததால், விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர் என்று பாமக தலைவர் ஜி.கே. மணி கூறினார்.

கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தருமபுரியில் திங்கள்கிழமை நடைபெற்றது. தொடர்ந்து, ஜி.கே.மணி நிருபர்களிடம் கூறியது:

விவசாயத்தை வளப்படுத்த பாசனத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க தமிழக அரசு தவறிவிட்டது. ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் விவசாயத் தொழிலுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அம் மாநிலங்களில் பாசனத் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

காவிரி நதிநீர் உரிமை, பாலாறு நதிநீர் பங்கீடு ஆகிய பாசன மேம்பாடுத் திட்டங்களில் தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தவில்லை. மழைக்காலங்களில் தண்ணீரை சேமிக்கும் திட்டம் முறைப்படுத்தப்படாததால், ஆண்டுதோறும் மேட்டூர் உள்ளிட்ட பல்வேறு அணைகளிலிருந்து வெளியேறும் உபரிநீர் கடலில் கலந்துவருகிறது. பாசனத் திட்டத்தை மேம்படுத்த அரசு மாநில அளவில் குழு அமைக்க வேண்டும்.

**நதிகளை இணைக்க வேண்டும்**

காவிரி, பாலாறு நதிநீர் இணைப்பையும், தாமிரபரணி, வைகை ஆறுகளை இணைக்கும் திட்டத்தையும் தமிழக அரசு செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒகேனக்கல் அல்லது மேட்டூரில் இருந்து விவசாயத்துக்காகப் பாசனத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். இந்தியாவில் உள்ள நதிகளை தேசிய மயமாக்கப்பட்டப் பின்னரே நதிநீர் இணைப்பு சாத்தியமாகும்.

**சாதிவாரி கணக்கெடுப்பு**

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தேர்தல் நேரத்தின் போதே கூட்டணி!**

தமிழகத்தில் பாமகவை பலப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நேரங்களில் கூட்டணி குறித்து முடிவெடுக்கப்படும். 1989 முதல் தற்போது வரை பாமக போட்டியிட்ட தேர்தல்களில் தனித்து நின்று பெற்ற வாக்குகள் மற்றும் கூட்டணியுடன் சேர்ந்து பெற்ற வாக்குகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்றார்.

எம்எல்ஏ இல. வேலுச்சாமி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எஸ்.பி. வெங்கடேஸ்வரன், மாநில துணைத் தலைவர் அ. சரவணன், வன்னியர் சங்க மாநிலத் துணைத் தலைவர் பாடி செல்வம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**நாற்று நடும் இயந்திரம்: விவசாயிகளுக்கு அறிமுகம்**

First Published : 30 Aug 2010 12:17:49 PM IST

செஞ்சி,ஆக. 29: நாற்று நடும் இயந்திரத்தின் மூலம் அதிக மகசூலை பெறும் வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல் முறை விளக்கமளிக்கப்பட்டது. செஞ்சியை அடுத்த சிங்கவரம் கிராமத்தில் இதற்கான நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

÷செஞ்சி பகுதி விவசாயிகள் பயன்படும் வகையில் செஞ்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | 18 லட்சம் மதிப்புள்ள நாற்று இயந்திரத்தை வாங்கியுள்ளது. இது குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்த வங்கி செயலர் என்.ரவிச்சந்திரன் கூறியது:

÷இந்த இயந்திரத்தின் மூலம் குறைந்த செலவில் அதிக மகசூலை பெற முடியும்.

சாதாரணமாக நாற்று நடுவதற்கு ஒரு ஏக்கருக்கு | 3 ஆயிரம் முதல் | 4 ஆயிரம் வரை செலவாகிறது. ஆனால் இயந்திரத்தின் மூலம் நாற்று நடுவதால் ஒரு ஏக்கருக்கு | 1300 மட்டுமே செலவாகும். மேலும் ஒரே மணி நேரத்தில் வேலை முடிந்து விடும். இதனால் பணம் மற்றும் கால நேரம் மிச்சமாகிறது.

÷ஒரு ஏக்கரில் நெல் பயிர் வைக்க சாதாரண முறையில் 30 கிலோ நெல் விதைகள் தேவைப்படும். ஆனால் நவீன முறையில் ஒரு ஏக்கரில் 19 கிலோ விதை நெல் போதுமானது.

÷மேலும் இந்த முறையில் நெல் விதைகளை தரம் பிரித்து விதைக்க வேண்டும். நெல் விதைகளை உப்புக்கரைசலில் கரைத்தால் தரமான விதைகள் தண்ணீருக்கு அடியில் நிற்கும். தரமற்ற விதைகள் நீரில் மிதக்கும். அவற்றை அப்புறப்படுத்தி விட்டு தரமான விதைகளை மட்டுமே விதைக்க வேண்டும்.

÷மேலும் இயந்திரத்தின் மூலம் நடப்படும் நாற்று இட்டும், விட்டும் நேராகவும், சீராகவும் காணப்படுவதால் கதிர் அதிக அளவில் கொத்து பிடித்து அதிக மகசூலை தரும். எனவே விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி நெல் விளைச்சலில் அதிக பயன் அடையுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**துல்லிய பண்ணைத் திட்டத்தில் விவசாயிகளுக்கு மானியம்**

First Published : 30 Aug 2010 01:15:06 PM IST

தேனி, ஆக. 29: உத்தமபாளையத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மூலம் துல்லிய பண்ணைத் திட்டத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்து வாழை மற்றும் காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கப்பட்டது.

உத்தமபாளையம் தோட்டக்கலை உதவி இயக்குநர் பொ.ராஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஆலிவர் 70 விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனத்திற்கு மானியமாக தலா ரூ.48 ஆயிரத்து 640, ரூ.15 ஆயிரம் மதிப்பிலான நீரில் கரையும் உரங்கள் ஆகியவற்றை வழங்கினார். இந்தத் திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் தங்கள் நிலத்தின் சிட்டா, அடங்கல், வரைபடம், குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றுடன் உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் என்று தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜன் கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி தோட்டக்கலை அலுவலர் மருதுபாண்டியன், உதவி விவசாய அலுவலர்கள் சுப்பிரமணி, பாலு ஆகியோர் செய்திருந்தனர்.

**தென்னை மரங்களுக்கு காப்பீட்டுத் திட்டம்**

First Published : 30 Aug 2010 01:14:39 PM IST

தேனி, ஆக. 29: தென்னை வளர்ச்சி வாரியம் சார்பில் வேளாண்மை காப்பீட்டு நிறுவனம் மூலம் தென்னை காப்பீட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சியரின் விவசாய நேர்முக உதவியாளர் ராமகிருஷ்ணன் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

இயற்கை சீற்றங்கள், பூச்சி நோய் தாக்குதல், விபத்து ஆகியவற்றால் பாதிக்கப்படும் தென்னை மரங்களுக்கு இழப்பீடு பெறுவதற்காக அரசு தென்னை காப்பீட்டுத் திட்டத்தை அறிவித்துள்ளது. தனிப் பயிராகவும், ஊடுபயிராகவும், வரப்பு ஓரங்களிலும், வீட்டுத் தோட்டத்திலும் உள்ள தென்னை மரங்களுக்கு இந்த திட்டத்தில் காப்பீடு செய்யலாம். குறைந்தபட்சம் பலன்தரக் கூடிய 10 மரங்கள் சாகுபடி செய்திருக்க வேண்டும்.

குட்டை மற்றும் ஒட்டு ரகங்களுக்கு 4-ம் ஆண்டில் இருந்தும், நெட்டை ரகங்களுக்கு 7-ம் ஆண்டில் இருந்தும் 60-ம் ஆண்டு வரை காப்பீடு செய்யலாம். காப்பீட்டுத் தொகை மற்றும் பிரீமியத்தை நிர்ணயிக்க, 4-ம் ஆண்டு முதல் 15-ம் ஆண்டு வரையிலான மரங்கள், 16-ம் ஆண்டு முதல் 60-ம்

ஆண்டு வரையுள்ள மரங்கள் என்று இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தி காப்பீடு செய்யப்படும். பிரீமியம் தொகையில் 75 சதவீதத்தை விவசாயிகள் சார்பில் அரசு செலுத்துகிறது.

விவசாயிகள் 25 சதவீதம் பிரீமியம் தொகையாக 4 முதல் 15 ஆண்டு வரையிலான மரங்களுக்கு ஒரு | 17 காசு செலுத்த வேண்டும். இந்தப் பருவத்தில் உள்ள மரத்துக்கு காப்பீட்டுத் தொகையாக | 600 வழங்கப்படும். 16 முதல் 60 ஆண்டு வரையிலான மரத்துக்கு பிரீமியமாக ஒரு | 58 காசு செலுத்த வேண்டும். இதற்கு காப்பீட்டுத் தொகையாக | 1,150 வழங்கப்படும்.

தென்னை காப்பீட்டுத் திட்டம் குறித்த விவரங்களை அறிய விவசாயிகள் அந்தந்தப் பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் விவசாய உதவி இயக்குநர்களைத் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**தோட்டக்கலைக் கல்லூரி மாணவர்கள் கிராம தங்கல் பயிற்சி**

First Published : 30 Aug 2010 01:15:54 PM IST

போடி, ஆக. 29: பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மாணவர்கள் கிராமத் தங்கல் பயிற்சித் திட்டத்தின் கீழ் விவசாயப் பயிர்களை ஆய்வு செய்தனர்.

பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரியில் 4-ம் ஆண்டு பயிலும் மாணவர்கள் கிராமத் தங்கல் பயிற்சித் திட்டத்தின் கீழ் ஒரு மாதம் பயிற்சி பெறுகின்றனர். இத்திட்டத்தின் கீழ் மாணவர்கள் மகேஷ்குமார், மணிகண்டன், பெரியசாமி, முனியசாமி, பிரவீன்குமார் ஆகியோர் போடியை அடுத்த சிலமலை கிராமத்தில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர்.

இவர்கள் முதல் கட்டமாக சிலமலை கிராம நிர்வாக அலுவலரை சந்தித்து அங்கு விளையும் பயிர்கள், காய்கறிகள் ஆகிய விவரங்களையும், இக்கிராமத்தின் நிர்வாகம், கிராமத்தில் உள்ள அத்தியாவசிய வசதிகள், தட்ப வெப்பநிலை, காலநிலை ஆகியவை குறித்துக் கேட்டறிந்தனர்.

போடி தோட்டக்கலை உதவி இயக்குநர் கெர்சோன் தங்கராஜ் மற்றும் தோட்டக்கலை அலுவலர்களை சந்தித்து அவர்கள் உதவியுடன் கிராமத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகள், பெரிய விவசாயிகள், அவர்களது பிரச்னைகள் குறித்து கேட்டனர்.

பின்னர் விவசாயிகளை சந்தித்து அவர்களின் விவசாய அனுபவங்கள், விவசாயிகள் சந்தித்து வரும் வேளாண் பிரச்னைகள் குறித்து ஆய்வு செய்து வருகின்றனர்.

இதன் மூலம் விவசாயப் பிரச்னைகளை எளிதாகச் சரிசெய்யும் முறை, குறைந்த அளவு நீரில் தன்னிறைவு விவசாயம், நோய் மற்றும் பூச்சியை எளிதில் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலக அலுவலர்கள், தோட்டக் கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள் உதவியுடன் கிராம மக்களுக்கு களப்பயிற்சியும், செயல் விளக்கமும் செய்து காண்பித்து வருகின்றனர். கிராம தங்கல் பயிற்சி செப்டம்பர் 15 வரை நடைபெறுகிறது.

**சம்பா நெல் சாகுபடி தொடக்கம்**

First Published : 30 Aug 2010 12:26:26 PM IST

காஞ்சிபுரம், ஆக. 29: காஞ்சிபுரம் மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடி தொடங்கியுள்ளது.

÷காஞ்சிபுரம் மாவட்டம் தொழில் நகரங்கள் நிறைந்த மாவட்டம். இருப்பினும் பழமை மாறாமல் விவசாயப் பணிகளில் பலர் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இம் மாவட்டத்தில் ஆண்டுக்கு 1,45,966 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

÷எனினும் இதில் 70 சதவீத நிலப் பரப்பில் சம்பா பருவத்தில்தான் சாகுபடி நடைபெறும். இந்த சாகுபடி தொடங்கும் நேரத்தில் தண்ணீர் பிரச்னை குறைவாக இருக்கும். கிணறு மற்றும் குழாய் கிணறுகளிலும் நீர் வறட்சி இருக்காது. ஏரிப் பாசனமும் உதவியாக இருக்கும். எனவே இப் பட்டத்தில் பயிர் செய்வதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

÷சம்பா நெல் சாகுபடி குறித்து விவசாயி ஆறுமுகம் கூறுகையில்,

""சம்பா பட்டத்தில் பயிரிடப்படும் நெல்லுக்கு நல்ல விளைச்சல் கிடைக்கிறது.

இந்தக் காலத்தில் தண்ணீர் பஞ்சமும் அதிகம் இருக்காது. ஆனால் நெல் அறுவடையின் போது மழையால் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனினும் வடிகால் பராமரிக்கப்பட்டால் பாதிப்பில் இருந்து தப்பலாம்.

÷பல விவசாயிகள் ஒரே நேரத்தில் சம்பா அறுவடை செய்வதால் அந்நேரத்தில் நெல் விலையில் சரிவு ஏற்படுகிறது. நெல் விலையில் சரிவு ஏற்படாமல் இருந்தால் விவசாயிகளுக்கு லாபமாக இருக்கும்'' என்றார்.

தினமலர்

**உரச் செலவை குறைக்க வேளாண் அதிகாரி ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2010,00:35 IST

கடலூர்: விவசாயத்தில் நேரடி உரங்களை பயன்படுத்தி உரச் செலவை குறைத்திட வேளாண் இணை இயக்குனர் ஆலோசனை வழங்கியுள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிருக்குத் தேவையான சத்துக்களான தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை தரவல்ல ரசாயன உரங்களை நேரடியாக பயன்படுத்தாமல் கலப்பு உரங்களை பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு கலப்பு உரம் மற்றும் கூட்டு உரங்களை பயன்படுத்தும் போது பயிருக்கு தேவையான அளவு பேரூட்ட சத் துக்களை

கணக்கிட்டு இடாத நிலையினால் உரச் செலவு அதிகரிக்கிறது. மேலும், பயிருக்குத் தேவையான பேரூட்ட சத்துக்களை விட கூடுதலாக இடப்படும உரச்சத்துக்கள் மண்ணில் விரயமாகிறது. கலப்பு உரங்களில் உள்ள சத்துக்களின் அளவு குறைந்திருக்கக்கூடிய நிலை ஏற்பட்டால் பயிருக்குத் தேவையான உரச்சத்துகள் சரியான அளவில் பயிருக்கு கிடைக்காத நிலை ஏற்படுகிறது. இந்நிலையை தவிர்த்திட விவசாயிகள் மண் ஆய்வு முடிவுகளின் பேரில் பயிருக்குத் தேவையான சத்துக்களான தழை, மணி, சாம்பல் சத்துக்கள் நிறைந்த யூரியா, சூப்பர் பாஸ்பேட் மற்றும் மூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்கள் பரிந்துரைக்கப்படும் அளவில் கணக்கிட்டு பயன்படுத்த வேண்டும் என  செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மானிய விலையில் விதை நெல் விற்பனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2010,00:32 IST

சங்கராபுரம் : சங்கராபுரம் பகுதியில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை நெல் வழங்கப் படுகிறது.
சங்கராபுரம் வேளாண் உதவி இயக் குனர் செல்வ ராஜ் வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பு: சங்கராபுரம் பகுதியில் தற்போது பரவலாக மழை பெய்துள்ளது. ஆகையால் விவசாயிகள் நடப்பு சம்பா பருவத்திற்கான நெல் ரகங் கள் மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, ஏ. எஸ்.டி.,19, ஆடுதுறை 39 போன்ற நெல் ரகங் கள் போதிய அளவு கிடங்கில் இருப்பு வைக்கப் பட்டுள்ளது. ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத் தின் கீழ் விதை நெல் ஒரு கிலோ விற்கு 5 ரூபாய் மானிய விலையில் வழங் கப்படு கிறது. சங்கரா புரம் பகுதி விவசாயிகள் வேளாண் விவசாய கிடங்கில் தங்களுக்கு தேவையான நெல் ரகங் களை பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள் கிறேன்.

**கரும்பு, மரவள்ளியில் மாவுப்பூச்சி தாக்குதல்; விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2010,02:32 IST

ப.வேலூர்: மாவுப்பூச்சி தாக்குதலால் ப.வேலூர் பகுதியில் பயிரிட்டுள்ள கரும்பு, மரவள்ளி பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு, விவசாயிகள் பெருத்த இழப்பை சந்தித்துள்ளனர். நோய் தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். ப.வேலூர் பகுதிக்கு உட்பட்ட பரமத்தி, மரவாபாளையம், படமுடிபாளையம், மாவுரெட்டி உள்ளிட்ட பகுதிகளில் கரும்பு, மரவள்ளி போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சில வாரங்களாக இப்பயிர்களில் கள்ளிப்பூச்சி, செம்பேன் பூச்சி

என்ற மாவுப்பூச்சி தாக்கி விவசாயிகளுக்கு பெருத்த இழப்பை ஏற்படுத்தி உள்ளது. இப்பூச்சி தாக்குண்ட மரவள்ளிக்கிழங்கு செடி, தழைகள் கொட்டி பயிரை வாட வைத்துவிடும்.

கிழங்கு அறுவடையின்போது வழக்கமான எடையை விட குறைந்த எடையே காணப்படும். கிழங்கு அறுவடையின் போது அதன் எடையை பொறுத்தே லாபத்தை பார்க்க முடியும். அதேபோல் கரும்பையும் இந்நோய் தாக்கி உள்ளதால், அப்பயிர் வாடி உள்ளது. கரும்பை தாக்கும் நோய், அதன் சோகை அடியில் இருந்து சோகையின் பச்சை நிறத்தை மாற்றி விடுகிறது. கரும்பின் தண்டுப்பகுதியில் அதன் நீர்ச்சத்தை உறிஞ்சி விடுவதால், கரும்பில் இருந்து எடுக்கும் சாறு பாதியாக குறைந்துவிடுகிறது. தொற்றுநோய் போல் பரவி வருவதால் கள்ளிப்பூச்சியால் விவசாய பயிர்கள் சேதம் அடைந்து பெருத்த இழப்பை ஏற்படுத்தி வருகிறது. அதை அழிக்க பல்வேறு மருந்துகள் பரிந்துரையின் படி அடித்தும் எவ்வித பயனும் இல்லை. மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த முடியாததால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர். இது குறித்து பரமத்தியை சேர்ந்த விவசாயி ராஜேந்திரன் கூறியதாவது: மாவுப்பூச்சி தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. வெள்ளை நிறத்தில் சிறுசிறு பூச்சிகளாக பயிர்கள் மீது அமர்ந்து பாழாக்குகிறது. அதனால், விவசாயத்தில் போட்ட முதலையே எடுக்கமுடியாத சூழ்நிலையால் கரும்பு மற்றும் மரவள்ளி பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விரக்தியில் உள்ளனர். இந்நோய் குறித்து ஆய்வு செய்யாத பரமத்தி வேளாண் விரிவாக்க மைய அலுவலர்கள் மீது விவசாயிகள் கடும் அதிருப்தியில் உள்ளனர். கரும்பு, மரவள்ளியில் தாக்கிய மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த வேளாண் அலுவலர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**பசுந்தேயிலை விலையில் 'ஓகே!' : 12.76 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு தயார்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,21:00 IST

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏலத்தில், இலை ரகத்தின் விலை உயர்ந்தது; டஸ்ட் ரக விலை குறைந்தது; வர்த்தகத்தில் ஏற்றத் தாழ்வு காணப்பட்டாலும், பசுந்தேயிலைக்கு கட்டுப்படியான விலை வழங்கப்பட்டது.
குன்னூர் தேயிலை ஏல மையத்தில், விற்பனை எண் 34க்கான ஏலம் நடத்தப்பட்டது; 14.17 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு இருந்தது; இலை ரகம் 10.13 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 4.04 லட்சம் கிலோ அடங்கும். ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்தவரை, பாகிஸ்தான், ரஷ்யா நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு ஓரளவு இருந்தது; தரமான தேயிலைத் தூளை கூடுதல் விலை கொடுத்து வாங்கினர். சாதாரண, நடுத்தர தூளை ஏற்றுமதி வர்த்தகர்கள் புறக்கணித்தனர். வழக்கமாக பங்கேற்கும் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா உட்பட உள்நாட்டு

வர்த்தகர்களின் பங்களிப்பு குறைவாகவே இருந்தது; இதனால், 20 சதவீத தேயிலைத் தூள் தேக்கமடைந்தது.

இலை ரகத்துக்கு மவுசு: இலை ரக ஏலத்தில், அனைத்து ரக தூளின் விலையும் கிலோவுக்கு 2 ரூபாய் அதிகரித்தது. டஸ்ட் ரகத்தில், 2 ரூபாய் குறைந்தது. சி.டி.சி., ரகத்தில், தர்மோனா தேயிலைத் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 140 ரூபாய் விலை கிடைத்தது. 90க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள், 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன; ஆர்தோடக்ஸ் ரகத்தில், கர்சன் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் 194 ரூபாய் விலை கிடைத்தது; 30க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. இலை ரக விற்பனையில், சாதாரண ரக தூளுக்கு 32 -38 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 80 - 122 ரூபாய், டஸ்ட் ரகத்தில், சாதாரண ரக தூளுக்கு 35-41 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 90 - 134 ரூபாய் விலை கிடைத்தது.

விற்பனை எண் 35க்கான ஏலம், வரும் 2, 3ம் தேதிகளில் நடத்தப்பட உள்ளது; 12.76 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு உள்ளது; இலை ரகம் 8.98 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 3.78 லட்சம் கிலோ அடங்கும். இது, கடந்த ஏலத்தை விட 1.51 லட்சம் கிலோ குறைவு.குறைகிறது

குறைந்தபட்ச விலை: தேயிலை ஏலத்தில் விற்கப்படும் தேயிலைத் தூள் விலையின் அடிப்படையில் தான், பசுந்தேயிலைக்கான விலையும் நிர்ணயிக்கப்படுகிறது.

அதனடிப்படையில், தேயிலைத் தூளின் குறைந்தபட்ச விலை 50 ரூபாயில் இருந்து படிப்படியாக குறைந்து, தற்போது 32 ரூபாயாக உள்ளது. இதனால், பசுந்தேயிலைக்கு வழங்கப்படும் விலையிலும் அடி விழும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். வர்த்தகத்தில் நிலையற்ற தன்மை நிலவிய போதும், விவசாயிகள் வழங்கிய பசுந்தேயிலைக்கு பல இடங்களில் கட்டுப்படியான விலை வழங்கப்பட்டது. கோத்தகிரி பகுதியில், கிலோ பசுந்தேயிலைக்கு 8 ரூபாய் முன்பணம் வழங்கப்பட்டது. குன்னூர் பகுதிகளில் சில தொழிற்சாலைகள் 8, 9 ரூபாய் என மாறுபட்ட விலை வழங்கின. தரமான "ஏ' கிரேடு பசுந்தேயிலைக்கு 10 - 13 ரூபாய் வரை விலை வழங்கப்பட்டது. விலையை அடிப்படையாக எடுத்துக் கொள்ளாமல், தரம் வாரியாக விலை வழங்கப்படுவது தான், இந்த திருப்தியான நிலைக்கு காரணம் என கூறப்படுகிறது.

**பண்ணை பள்ளி துவக்க விழா**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2010,02:03 IST

குளித்தலை: குளித்தலை அருகே கட்டாணிமேட்டில் பண்ணை பள்ளி துவக்க விழா நடந்தது.தோகமலை வேளாண்மைத்துறை, புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் மையம்

இணைந்து கட்டாணிமேட்டில் (ஆத்மா) வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் பண்ணை பள்ளி துவக்க விழா நடந்தது.

வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) காதர்மொஹைதீன் தலைமை வகித்தார்.சரஸ்வதி கே.வி.கே., ஒருங்கிணைப்பாளர் திரவியம் பேசியதாவது: பண்ணைபள்ளி தொடர்ந்து ஆறு வாரங்களுக்கு கட்டாணிமேட்டில் நடக்கும். விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி முறையில் பின்பற்றப்படும் அனைத்து தொழில் நுட்பங்களையும் தெரிந்து கொண்டு பயன்பெறவேண்டும். சம்பா பருவத்தில் செம்மை நெல் சாகுபடி முறையை பின்பற்றி அதிக மகசூல் பெற ஆந்திரா பொன்னி (பீ.பி.டி.,5204) நெல் விதைகள், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட சத்து அனைத்தும் தோகமலை வேளாண்மை மையத்தில் விற்பனைக்கு உள்ளது.விவசாய பணியில் தொழில் நுட்பங்கள் குறித்து புழுதேரி சரஸ்வதி வேளாண் தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் பயிற்சி, விளக்கம் அளிக்கப்படும்.இவ்வாறு அவர் பேசினார்.விழாவில், வேளாண் துறை அலுவலர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் பங்கேற்றனர்.

**புவி வெப்பமாதலை தவிர்க்க இயற்கையோடு இணைந்த கொள்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,22:56 IST

புதூர் ""புவி வெப்பமாதலை தவிர்க்க இயற்கையோடு இணைந்த பொருளாதாரக் கொள்கையை கடைபிடிக்க வேண்டும்"" என, விஞ்ஞானி சாகர் தாரா பேசினார். புவி வெப்பமாதலை தவிர்ப்பது குறித்த, மாநில மாநாட்டிற்கான ஆலோசனைக் கூட்டம் சமூக ஆர்வலர் ஒய். டேவிட் தலைமையில் நடந்தது. சுற்றுச்சூழல், சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், விவசாய சங்க தலைவர்கள், நுகர்வோர் இயக்கங்களை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஐதராபாத்தை சேர்ந்த விஞ்ஞானி சாகர் தாரா பேசியதாவது: புவி வெப்பமாதல் என்பது உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் முக்கியமான ஒன்றாக உள்ளது. புவி வெப்பமாதலுக்கு, மரங்கள் அழிக்கப்படுவதும், பிரிஜ், ஏசி., போன்றவற்றிலிருந்து வெளியேறும் குளோரோ புளோரோ கார்பன் காஸ்களுமே காரணம்.
புவி சூடாவதால் பூமியானது நிலையில்லாமல் செயல்பட துவங்கி இயற்கை சீரழிவை சந்தித்துக் கொண்டிருக்கிறது. இதே வேகத்தில் புவி வெப்பமாதல் நிகழ்வுகள் அதிகரித்தால், பொருளாதர தாக்கம் ஏற்பட்டு மிக விரைவில் கொத்தளிப்பான சூழல் ஏற்படும். மனித சமுதாயம் மிகப்பெரிய பேரழிவை சந்திக்கும். இதை தவிர்க்க, மக்களை சார்ந்த உற்பத்தி முறைகளை ஊக்கப்படுத்த வேண்டும். இயற்கையோடு இணைந்த பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும். புவி வெப்பமாதலை தவிர்க்க, ரியோ உச்சி மாநாடு முதல் கோபன்ஹேகன் மாநாடு வரை உலக

அளவில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எதுவும் அழிவை தடுப்பதற்கான முறையில் அமையவில்லை.

எனவே இந்த பேரழிவில் இருந்து நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள முன்வர வேண்டும். அதற்கு மரம் வளர்த்தல், பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்தல், மின் சேமிப்பு போன்ற எளிய முறைகளை கடைபிடிக்க வேண்டும், என்றார்.

**கரும்பு சக்கையில் இருந்து முதல்முறையாக 15 மெகாவாட் மின் உற்பத்தி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,22:46 IST



அலங்காநல்லூர்: மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் தேசிய சர்க்கரை ஆலையில் இருந்து வெளியேற்றப்படும் கரும்பு சக்கையில் இருந்து, 15 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படவுள்ளது. இதற்காக, ஆலை வளாகத்தில் கட்டமைப்பு பணிகள் துரிதமாக நடக்கிறது. உபரி மின்சாரம் வாரியத்திற்கு விற்கப்படுவதால், மின் வெட்டில் இருந்து மதுரை தப்பும் வாய்ப்புள்ளது. தென் மாவட்ட அளவில், அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை சர்க்கரை உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. ஆண்டு தோறும் டிச., முதல் ஆலையில் சர்க்கரை உற்பத்தி நடக்கிறது. இதற்காக, விவசாயிகளிடம் இருந்து டன் கணக்கில் கரும்பு கொள்முதல் செய்யப்படுகிறது. உற்பத்திக்கு தேவையான மின்சாரம் வாரியத்திடம் இருந்து விலைக்கு வாங்கப்படுகிறது. இதனால், ஆலையின் வருவாயில் பெரும் பகுதி மின்சாரத்திற்கு செலவிட வேண்டியுள்ளது.

செலவை கட்டுப்படுத்தவும், நுகர்வோர் நலன் கருதி சர்க்கரை விலையை குறைக்கவும், மின்சாரம் தயாரிக்க ஆலை நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டது. கரும்பு சக்கையில் மின் உற்பத்தி: இதற்காக, ஆலை வளாகத்தில் 20 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கு, 110 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டுமானப்பணிகள் துரிதமாக நடக்கிறது. ஆலைக்கு தேவையான 15

மெகாவாட் மின்சாரம் தினமும் உற்பத்தி செய்யப்படும். இதற்கான பணியை "வால்சந்த்நகர்' எனும் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மின் உற்பத்திக்கு தேவையான டர்பைன், பாய்லர், நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுமானப் பணிகளை விரைவில் முடிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. உபரி மின்சாரம் விற்கவும் ரெடி: அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையை அடுத்து, தஞ்சாவூர், வேலூர் உட்பட தமிழகம் முழுவதும் 40 தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும், கரும்பு சக்கையில் இருந்து மின் உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளன.

எனினும், தென் மாவட்ட அளவில், முதல் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை என்ற பெருமையை பெற்றுள்ள அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையில், கரும்பு சக்கையில் இருந்து பெறப்படும் மின்சாரம், ஆலைக்கு தேவை போக , உபரியாக கிடைக்கும் மின்சாரத்தை விற்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒப்பந்தம் மின் வாரியத்திடம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதனால், மின் வெட்டில் இருந்து மதுரைக்கு விடிவு பிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அனைத்து பயிர்களுக்கும் காப்பீடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2010,03:50 IST

மதுரை: ""கிணறு, இறவைப் பாசனம் மூலம் பயிரிடப் பட்டுள்ள அனைத்து பயிர்களுக்கும் காப்பீடு செய்ய வேண்டும்," என மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சுப்பிரமணியன் பேசினார்.மதுரையில் வங்கியாளர்கள் கூட்டம் கலெக்டர் காமராஜ் தலைமையில் நடந்தது. அதில் அவர் பேசியதாவது: இலவச வீடு வழங்கும் திட்டத்தில் அரசு மானியம் 75 ஆயிரம், ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு 20 ஆயிரம், இதர பிரிவினருக்கு 15 ஆயிரம் வங்கிக் கடன் வழங்கப்படும். கொட்டாம்பட்டி பகுதியில் 2500 குடிசை வீடுகள் உள்ளன. இவற்றிற்கு கடன் வழங்க, விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செங்கல் சூளை வைக்க 100 மகளிர் குழுக்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் பொருளாதாரக் கடன் வழங்க வேண்டும். வட்டி மானியத்துடன் கல்விக் கடன் பெற குடும்ப ஆண்டு வருவாய் 4.50 லட்சம் ரூபாய் இருக்க வேண்டும். வருவாய் சான்று பெற துணைத் தாசில்தார் நியமிக்கப் பட்டுள்ளார்," என்றார். சுப்பிரமணியன்,"" மதுரை மாவட்டத்தில் 2009-10 ல் 160 கோடி ரூபாய் கல்விக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு, வட்டி மானியம் 15 கோடி ரூபாய் மத்திய அரசு வழங்கும். ஒரு குடும்பத்தில் இரண்டு குழந்தைகள் இக்கடன் பெறலாம். ஐ.எஸ். எச்.யு.பி., திட்டத்தின் கீழ் 1609 விண்ணப்பங்கள் வந்துள்ளன. இதில் 747 நிலுவையில் உள்ளன. இவற்றிற்கு விரைந்து கடன் வழங்க வேண்டும். தேசிய பயிர்க் காப் பீட்டு திட்டம் செம்மை நெல்

சாகுபடியில் சரியாக செயல்படுத்தப்படவில்லை, என விவசாயிகள் புகார் தெரிவித்தனர். கிணறு, இறவைப் பாசனம் மூலம் பயிரிடப்பட்டுள்ள அனைத்து பயிர்களுக்கும் காப்பீடு செய்ய வேளாண் அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார். கனரா வங்கி உதவி பொதுமேலாளர் விஜயகுமார், ரிசர்வ் வங்கி உதவி பொதுமேலாளர் ஜார்ஜ் பங்கேற்றனர்.

**தென்னை மரங்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,22:17 IST

வடமதுரை: வடமதுரை வட்டாரத் தில் 800 ஏக்கர் பரப்பில் தென்னை சாகுபடி உள் ளது. நீண்ட காலத்திற்கு நிரந் தர வருமானம் தரக்கூடிய தென்னை மரங்கள் பாதிப் படைந்தால் விவசாயிக்கு கடும் இழப்பு ஏற்படும். இதற்காக அக்ரி கல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட், தமிழக அரசு மற்றும் மத்திய அரசு இணைந்து தென்னை மரக் காப்பீடு திட்டத்தை கொண்டு வந்துள்ளது. குறைந்தது 10 மரங்கள் இருக்க வேண்டும். 4 வயது முதல் 15 வயது உள்ள மரங்களுக்கு மான்யம் நீங்கலாக விவசாயி மரம் ஒன்றிற்கு ஆண்டு பிரி மியமாக ஒரு ரூபாய் பதி னேழு காசு செலுத்த வேண்டும். 16 முதல் 60 வயது வரையுள்ள மரங்களுக்கு ஒரு ரூபாய் ஐம்பத்தி எட்டு காசு செலுத்த வேண்டும். காப்பீடுத் தொகை மரம் ஒன்றிற்கு ரூ. 600 மற்றும் 1150. எதிர்பாராத தீவிபத்து, நில அதிர்வு, புயல், வெள்ளம், வறட்சி, பூச்சி நோய் தாக்குதல், சுனாமி போன்ற இயற்கை சீற்றங் களால் தென்னை மர தோப்பு பாதிக்கப்பட் டால், விவசாயிகள் ஒரு வார காலத்திற்குள் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு தெரிவித்து, ஆய்வின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படும். ஆர்வமுள்ள விவசாயி கள் சிட்டா, அடங்கல் விபரங்களுடன் வேளாண் கள அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**கடன் நிலுவை விவசாயிகள் புகார்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,22:08 IST

திண்டுக்கல்: சாந்தலாபுரம் கூட்டுறவு சங்கம் மூலம் விவசாயி களுக்கு மாடு வாங்க கடந்த 2008ல் கடன் தரப் பட்டது. தொகை செலுத்திய பின்னரும் நிலுவை உள்ள தாக வங்கி தெரிவித் துள்ளது. மக்கள் குறை தீர்க்கும் நாளில் விவசாயி கள் புகார் தந்தனர். விசாரணைக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

**செம்மைநெல் சாகுபடி இலக்கினை எட்ட முடியாததற்கு காரணம் என்ன**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,22:29 IST

தேனி: தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக செம்மை நெல் சாகுபடி செய்வதில் கடந்த ஆண்டு இலக்கினை எட்ட முடியவில்லை என விவசாயத்துறை தெரிவித்துள்ளது. தேனி மாவட்டத்தில் கடந்த 2009ம் ஆண்டு 7000ம் எக்டேர் செம்மை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாகவும், செம்மை நெல் சாகுபடி பற்றி விவசாயிகளுக்கு போதிய விழிப்புணர்வு இல்லாததால், இலக்கினை எட்ட முடியவில்லை. 6818 எக்டேரில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டு விவசாயிகள் மத்தியில் செம்மை நெல் சாகுபடி தொடர்பாக விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. தவிர ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட் டம், தேசிய விவசாய வளர்ச்சி திட்டம், நீர்வள நிலவள திட்டம், விதைக்கிராம திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் செம்மை நெல் சாகுபடி பரப்பினை 8 ஆயிரம் எக்டேராக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என விவசாயத்துறை தெரிவித்துள்ளது.

**பூட்டிகிடக்கும் கால்நடை மருத்துவமனை : கால்நடை வளர்ப்போர் தவிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2010,23:15 IST

தொண்டி : தொண்டி கால்நடை மருத்துவமனை பூட்டிகிடப்பதால் ஆடு,மாடுகள் மற்றும் கோழிகளுக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை உள்ளதால், கால்நடை வளர்ப்போர் பாதிக்கின்றனர். தொண்டி பகுதியில் ஏராளமான குக்கிராமங்கள் உள்ளன. இப்பகுதி மக்கள் கோழி வளர்ப்பில் மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றனர். நாட்டு கோழி கிலோ 200 ரூபாய் வரை விற்பனை ஆவதால் ,குடிசை தொழில் போல் கோழி வளர்ப்பில் அதிகம் ஈடுப்பட்டு உள்ளனர்.

ஆனால் தொண்டி மின்வாரிய அலுவலகம் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் டாக்டர் இல்லாததால் எந்நேரமும் பூட்டியே கிடக்கிறது. இதனால் நோயால் தாக்கபடும் ஆடுமாடு மற்றும் கோழிகளுக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை  ஏற்பட்டுள்ளது . வெக்கை நோயால் தாக்கப்படும் கோழிகளுக்கு தடுப்பூசி போட முடியாததால் கோழிகள் இறப்பதும் அதிகரிக்கிறது. உடனடியாக டாக்டர் நியமனம் செய்து , மருத்துவமனையை திறக்க சம்பந்தபட்ட துறையினர் முன்வரவேண்டும்.

குமரியில் வாழை பழம் விலை உயர்வு : பெங்களூரில் இருந்து இறக்குமதி

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2010,00:15 IST

மார்த்தாண்டம் : குமரி மாவட்டத்தில் வாழை பழங்களின் விலை வரலாறு காணாத விதத்தில் அதிகரித்துள்ளது. இருப்பினும் தேவை அதிகரித்துள்ளதால் பெங்களூரில் இருந்து பழம் இறக்குமதி செய்யப்படுகிறது.
கன்னியாகுமரி மாவட்டத்தில் வடசேரி, மார்த்தாண்டம் மார்க்கெட் பழங்களுக்கு பெயர் பெற்றது. மார்த்தாண்டம் மார்க்கெட் செவ்வாய், வெள்ளி கிழமைகளில் கூடினாலும் தினசரி பழங்கள், காய்கறிகள் கிடைக்கும் என்ற பெருமை உண்டு. இந்த மார்க்கெட்டுக்கு பேச்சிப்பாறை, கோதையார், பாகோடு, நட்டாலம், மேல்புறம், மஞ்சாலுமூடு, காப்புக்காடு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து வியாபாரிகள் பழங்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.
குமரி மாவட்டத்தில் இருந்து ஏத்தன் பழங்கள் அதிகமாக வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் ஏற்றுமதி செய்யும் ஏஜென்சிகள் பழங்களை தோட்டங்களில் இருந்தே மொத்தமாக வாங்கி செல்கின்றனர்.
மார்த்தாண்டம் மார்க்கெட்டில் ஏத்தன், செவ்வாழை, ரெசகதழி, மோரீஸ், பேயன் போன்ற அனைத்து வகையான பழங்களும் கிடைக்கிறது.
கேரளாவில் வசந்தகால விழாவான திருஓண பண்டிகை முடிந்ததை அடுத்து திருமண சீசன் துவங்கியுள்ளது. இதனால் தற்பொழுது பழங்கள் விலை வரலாறு காணாத விதத்தில் அதிகரித்துள்ளது. நூறு ஏத்தன் பழம் 500 முதல் 700 ரூபாய் வரையும், நூறு செவ்வாழை பழம் 500 முதல் 800 வரையும், நூறு ரசகதழி பழம் 250 முதல் 350 வரையும், நூறு மோரீஸ் பழம் 150 முதல் 250 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படுகிறது.

மட்டி, வெள்ளைதுழுவன் பழங்கள் குறைவாக விற்பனைக்கு வருவதால் அதிகமான டிமாண்ட் உள்ளது. இதனால் திருமணம் நடத்துபவர்கள் தேவையான பழங்களை மார்க்கெட்டில் கேட்கும் விலைக்கு வாங்கி செல்கின்றனர். விலை அதிகமாக இருப்பதால் பெட்டி கடைகளில் பழங்களின் சில்லறை விற்பனை குறைவாகவே நடக்கிறது. குமரி மாவட்டத்தில் விவசாயம் செய்யப்படும் வாழை பழங்களில் கூடுதல் சதவீதம் வழக்கமாக கேரளம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.
ஆனால் தற்பொழுது தேவை அதிகரித்துள்ளதால் பெங்களூரில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த பழங்கள் மோரிஸ் போன்று மிகுதியான சுவையுடன் மஞ்சள் நிறத்தில் காணப்படுகிறது. இந்த பழம் ஒரு கிலோ 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. வாழை பழங்களின் விலை உயர்வு குறித்து மார்த்தாண்டத்தை சேர்ந்த வியாபாரி ரகு கூறியதாவது:

பெங்களூரில் இருந்து பழங்கள் தற்பொழுது தினசரி குமரி மாவட்டத்திற்கு இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த பழத்தின் அமைப்பு மற்றும் ருசி மோரீஸ் போன்று காணப்பட்டாலும், வெளிப்புறம் மஞ்சள் நிறத்தில் காணப்படுகிறது. இந்த வாழை உயரம் குறைவாகவே காணப்படும். ஆனால் குலையின் நீளம் அதிகமாக காணப்படும். இவ்வாறு மார்த்தாண்டம் வியாபாரி ரகு கூறினார்.

**இயற்கை வேளாண்மை கருத்தரங்கம்**

ஆகஸ்ட் 31,2010,00:00 IST

புதுச்சேரி: புதுச்சேரி செம்படுகை நன்னீரகம், பூவுலகின் நண் பர்கள் இயக்கம் சார்பில் நேற்று முத்தரையர் மேல்நிலைப்பள்ளியில் கருத்தரங்கம் நடந்தது."உயிரியப் பன்மயமும் இயற்கை வேளாண்மையும்' என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கிற்கு செம்படுகை நன்னீரகத்தின் தலைவர் ராம்மூர்த்தி தலைமை தாங்கினார். பூவுலகின் நண்பர்கள் இயக்கத் தலைவர் சீனு தமிழ்மணி வரவேற்றார். விழாவையொட்டி புதுவை தமிழ் நெஞ்சனின் "முள்வேலி' துளிப்பா என்ற மலரை மதுரையை சேர்ந்த தாளாண்மை உழவர் இயக்கத்தை சேர்ந்த பாமயன் வெளியிட்டு பேசினார்.விழாவில் செம்படுகை நன்னீரக நிர்வாகிகள் தாமரைக்கோ, அரிமாப்பாண்டியன், ஜெயபாலன் ஆகியோர் பேசினர்.

செம்படுகை நன்னீரகத்தின் துணை செயலாளர் சீனுவாசன் நன்றி கூறினார்.

## ***இமாச்சலபிரதேசத்தில் அதிக உற்பத்தி ஆப்பிள் விலை மேலும் குறையும்***



மாத்வி ஷாலி
சண்டிகார்

நடப்பு ஆண்டில், ஆப்பிளின் விலை மிகவும் குறைந்துள்ளது. இந்த நிலையில், இமாச்சலபிரதேசம் மற்றும் காஷ்மீர் ஆகிய பகுதிகளில் ஆப்பிள் விளைச்சல் அமோகமாக உள்ளது. இதனால், சென்ற ஆண்டை விட, இவ்வாண்டில் ஆப்பிளின் விலை 50–60 சதவீதம் குறைந்து போயுள்ளது.

கொள்முதல்

இந்த நிலையில், தனியார் நிறுவனங்கள் இமாச்சல பிரதேசத்தில் நேரிடையாக ஆப்பிள் பழங்களை கொள்முதல் செய்து, நாட்டின் பல பகுதிகளுக்கு அளித்து வருகின்றன. இதனால், இனிவரும் மாதங்களில் இதன் விலை மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதானி நிறுவனம், மிக அதிக அளவில் ஆப்பிள் பழங்களை கொள்முதல் செய்து விநியோகித்து வருகிறது. இவ்வாண்டில், இந்நிறுவனம் இதுவரையிலுமாக 25,000 டன் ஆப்பிள் பழங்களை கொள்முதல் செய்துள்ளது. இதேபோன்று, கண்டெய்னர் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா நிறுவனமும் இதுவரையிலுமாக 12,000 டன் ஆப்பிள்களை கொள்முதல் செய்துள்ளது.

இந்நிறுவனங்கள் தவிர, தேவ்பூமி என்ற நிறுவனமும் 1,000 டன் ஆப்பிள்களை கொள்முதல் செய்துள்ளது.

இது குறித்து அதானி அக்ரி பிரஷ் நிறுவனத்தின் துணைத் தலைவர் ஸ்ரீனிவாஸ் ராமானுஜம் கூறும்போது, “நடப்பு ஆண்டில், ஆப்பிள் விளைச்சல் அமோகமாக உள்ளது. சென்ற ஆண்டில், ஒரு கிலோ ஆப்பிளை ரூ.55–60 என்ற விலையில் விவசாயிகளிடம் இருந்து வாங்கினோம். இந்த ஆண்டு ரூ.31 என்ற விலையில் வாங்குகிறோம். குறிப்பாக, ‘ராயல் டெலீஷியஸ்’ என்ற உயர் வகை ஆப்பிள்கள் குறைந்த விலையில் கிடைக்கின்றன” என்று தெரிவித்தார்.

காஷ்மீர்

இதுவரை, இமாச்சலபிரதேசத்தின் பல பகுதிகளில் இருந்துதான் மிக அதிக அளவில் ஆப்பிள்களை கொள்முதல் செய்துள்ளோம். அடுத்த 15 தினங்களில் காஷ்மீர் பகுதிகளில் இருந்தும் அதிக அளவில் ஆப்பிள்கள் கொள்முதல் செய்யப்படும். அப்போது, இதன் விலை மேலும் குறையும் என எதிர்பார்க்கிறோம் என்று அவர் மேலும் கூறினார்.

உள்நாட்டில், ஆப்பிள் விளைச்சல் அதிகரித்துள்ளதையடுத்தும், இதன் விலை மிகவும் குறைவாக உள்ளதையடுத்தும் இவ்வாண்டு சீனா மற்றும் அமெரிக்காவிலிருந்து குறைந்த அளவிற்கே ஆப்பிள் பழங்கள் இறக்குமதி ஆகும் என பிரஷ் அண்டு ஹெல்த்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி என்.கே.ஜாவா தெரிவித்தார்.

### மசினகுடி, வாழைத்தோட்டம் பகுதியில்

# கோதுமை சாகுபடியில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

மசினகுடி, ஆக.31-

மசினகுடி, வாழைத் தோட்டம் பகுதியில் விவசாயிகள் கோதுமை சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

**மலை தோட்ட காய்கறிகள்**

நீலகிரி மாவட்டம் என்றாலே தேயிலையும், மலை காய்கறியும் தான் நமது நினைவிற்கு வருகிறது. அதாவது உருளைக் கிழங்கு, கேரட், பீன்ஸ், பீட்ரூட் என பல்வேறு காய்கறிகள் தான் நீலகிரி மாவட்டத்தில் ஏராளமான விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

இதில் தற்போது மசினகுடி பகுதியில் உள்ள வாழைத் தோட்டம், மாயார், மாவனல்லா, பொக்காபுரம் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து நாள் தோறும் சுமார் 30 சதவீத மலை தோட்ட காய்கறிகள் ஊட்டி மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வருகின்றன.

**காலநிலைக்கு ஏற்ப விவசாயம்**

காலம், காலமாக மலை காய்கறிகளை சாகுபடி செய்து வரும் மசினகுடி, வாழைத் தோட்டம் பகுதி விவசாயிகள் காலத்திற்கு ஏற்பவும், மாறி வரும் காலநிலைக்கு ஏற்பவும் விவசாயம் செய்ய தொடங்கி உள்ளார்கள்.

அதாவது பீன்ஸ், பூண்டு, இஞ்சி, மஞ்சள், உருளைக் கிழங்கு விவசாயத்தில் இருந்து மலர் சாகுபடிக்கு மாறி வருகின்றார்கள். இதில் தற்போது சிறு விவசாயிகள் நல்ல லாபம் பெற்று வந்தாலும், புதிய விவசாய பயிர்களை பயிர் செய்வதில் அதிக ஆர்வம் காட்ட தொடங்கி உள்ளார்கள்.

**கோதுமை சாகுபடி**

பஞ்சாப் உள்பட வட மாநிலங்களில் மட்டுமே வளரக் கூடியதும், வட இந்தியாவின் முக்கிய உணவு பயிருமான கோதுமையை சாகுபடி செய்ய தொடங்கி உள்ளார்கள்.

கடந்த 3 ஆண்டுகளாக மசினகுடி , வாழைத் தோட்டம், பொக்காபுரம் போன்ற பகுதிகளில் கோதுமை சாகுபடி செய்யப்படுகிறது.

கோதுமை வளர ஏற்ற காலநிலையும், மண்ணின் தன்மையும் இங்கு உள்ளதால் பல ஏக்கர் பரப்பளவில் தற்போது போதுமை பயிர் செய்யப்பட்டு உள்ளது.

அது மட்டுமின்றி சுமார் 300-க்கும் மேற்பட்ட வகைகளில் கோதுமையை இங்கு பயிர் செய்யும் வட மாநில ஆராய்ச்சி நிறுவனங்கள் புதிய ரகங்களையும் கண்டுபிடிக்கும் முயற்சியும் செய்து வருகின்றன.

**விவசாயிகள் ஆர்வம்**

மசினகுடி பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கோதுமை வட மாநிலங்களுக்கு எடுத்து சென்று விதையாகவும் பயன்படுத்துகின்றார்கள்.

தமிழகத்திலேயே மசினகுடியில் கோதுமை சாகுபடி செய்வது வியப்பை ஏற்படுத்தினாலும், குட்டை ரகம், நெட்டை ரகம் என பல உயரங்களில் வளரும் கோதுமை சாகுபடி செய்ய ஏராளமான விவசாயிகள் ஆர் வம் காட்ட தொடங்கி உள்ளார் கள்.

இதனால் மசினகுடி, வாழைத் தோட்டம் பகுதிகளில் அதிகள வில் கோதுமை செடிகளை காண முடிகிறது.



மசினகுடி அருகே வாழைத்தோட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள கோதுமை.